செய்தி வெளியீடு எண் :05 நாள் :09.11.2017

**தேனி மாவட்டம்,**
**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா**
**செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள**
**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் வரலாற்று புகைப்படக்கண்காட்சியினை**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்:-**

*********

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் விலக்கு, புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் திடலில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் வரலாற்று புகைப்படக்கண்காட்சியினை இன்று (09.11.2017) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உயரிய லட்சியத்தினையும், சிறப்பினையும் நினைவுகூறும் வகையில், தமிழகத்தில் மாவட்டந்தோறும் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனைத்தொடர்ந்து, தேனி மாவட்டத்தில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று (09.11.2017) கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பங்கேற்று பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, ரூபாய் 21 கோடியே 19 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான முடிவுற்ற 26 திட்டப்பணிகளைத் திறந்து வைத்தும், ரூபாய் 22 கோடியே 48 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பிலான 22 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், 20,293 பயனாளிகளுக்கு ரூபாய் 99 கோடியே 46 இலட்சத்து 94 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கி சிறப்பிக்கவுள்ளார்கள்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அமைக்கப்பட்டுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகைப்படக்கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், இன்று (09.11.2017) காலை 11.00 மணியளவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் காலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். மேலும், அரசின் சார்பில், 20-க்கும் மேற்பட்ட பல்வேறு அரசுத்துறைகளின் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களையும் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை திரு.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சுற்றுசூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு இணைச்செயலாளர் முனைவர்.பொ.சங்கர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் திரு.எஸ்.பி.எழிலழகன் அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.பொன்னம்மாள் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரா.ஆனந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**